STC .No. 79/2025
நாள் – 01.04.2026.

பு.சா.1 – திரு. ராஜாசிதம்பரம் சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )

(எதிரி ஆஜரில்லை. ஆஜர் விலக்களிப்பு செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்).

இந்த காசோலை மோசடி வழக்கு தவிற எதிரி மீது உரிமையியல் நீதிமன்றதில் ரூ.1 கோடிக்கான காசோலை மோசடி வழக்கு O.S.No.483/2024 என தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 23.12.2022 அன்று ரூ.35 இலட்சமும், 20.03.2023 அன்று ரூ.40 இலட்சமும், 13.08.2023 அன்று ரூ.25 இலட்சமும் கொடுத்ததாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் மேற்படி 3 பரிவர்த்தனைகளின் போதும் தனித்தனியாக கடனுறுதி சீட்டு எழுதி பெற்றதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 02.06.2024 அன்று 10.08.2024 என பின்தேதியிட்டு ரூ.1 கோடிக்காக காசோலை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டுகளை திரும்ப பெற்றுக் கொண்டு காசோலை கொடுத்தார். மேற்படி சங்கதியை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் பார்த்தால் தான் சொல்லமுடியும். தற்போது பிராது காட்டப்பட்டு பார்வையிட்டு சொல்லபடவில்லை என சாட்சி குறிப்பிடுகிறார். மேற்படி அசல் வழக்கில் இந்த வழக்கின் பரிவர்த்தனை ரூ.50 இலட்சம் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் பரிவர்த்தனைகள் 31.03.2022 அன்று ரூ.30 இலட்சமும், 10.05.2022 அன்று வங்கி பரிவர்த்தனை மூலம் ரூ.5 இலட்சமும். 01.04.2024 அன்று ரூ.15 இலட்சம் என மொத்தம் ரூ.50 இலட்சம் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் இரண்டு பரிவர்த்தனைகளின் போது கடனுறுதி சீட்டு கொடுத்தார். மூன்றாவது பரிவர்த்தனையின் போது மேற்படி கடனுறுதி சீட்டுகளை திரும்ப பெற்றுக் கொண்டு காசோலை கொடுத்தார். காசோலையில் 08.08.2024 என பின்தேதியிட்டு கொடுத்தார். கடனுறுதி சீட்டுகளை கொடுத்துவிட்டு காசோலையை பெற்றதற்கு வேறு

காரணங்கள் உள்ளதா என்றால் இல்லை. பணத்தை எடுத்துக்கொள்ள சொல்லி எதிரி தாமாகவே கொடுத்ததால் வாங்கினேன். எதிரியுடன் கடந்த 2014 முதல் வரவு செலவு உள்ளது. அவ்வபோது பணத்தை பெற்று திருப்பி செலுத்துவார். எதிரியின் கணவரை 40 வருடமாக தெரியும். எதிரியின் மகனை 20 வருடத்திற்கு மேல் தெரியும்.

எதிரியின் மகன் ஸ்ரீராமுடன் வரவு செலவு உள்ளதா என்றால் உள்ளது. அவரது அம்மா பெயரில் கான்ட்ராக்ட் தொழில் செய்து வருகிறார் அதற்காக பணம் வாங்கியுள்ளார். மேற்படி விவரங்களை புகார் அறிவிப்பு பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் சரியல்ல. அறிவிப்பில் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாகவும் எதிரியும் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாகவும் அதன் மூலம் அறிமுகம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் எதிரி காண்ராக்ட் தொழில் செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி அனுப்பிய பதிலறிவிப்பில் அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என குறிப்பிட்டதால் தான் நான் புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் காண்ராக்ட் தொழில் செய்யததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பதிலறிவிப்பில் என்னை தெரியாது எனவும் என்னுடன் எந்த வரவு செலவும் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அது உண்மை இல்லை. நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன். 2022–2023, 2023–2024, 2024–2025 ஆகிய நிதி ஆண்டுகளில் எதிரிக்கு கொடுத்த ரூ.1.5 கோடி தொகையை வருமான வரி கணக்கு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பகுதி தொகை குறிப்பிட்டுள்ளேன். எதிரி தாமாக முன்வந்து காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 23.04.2023 முதல் எதிரி பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கையாக உள்ளார் என்றால் சரியல்ல. 2 மாதம் மட்டும் தான் அவ்வாறு இருந்தார் நானே மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்திருந்தேன். கோவில் கும்பாபிசேகத்தை அவர்தான் நடத்தினார்.

அதற்கு அழைப்பிதழை அவர்தான் கொடுத்தார். அந்த நிகழ்வில் 2 மணிநேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தோம். நான் சொன்னவாறு எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி என்னை சந்தித்தது இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி 2023 ஆண்டு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டார் என்றாலும் அவ்வாறன நிலையில் 2024 ஆண்டு மீண்டும் கடன் பெற்றார் என்பதும் அது வரை வட்டி செலுத்திவந்தார் என்பதும் ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது சொத்துக்கள் இருந்ததால் சுப்புலட்சுமி காண்டாக்ரடர் நிறுவனம் எதிரி பெயரில் பதிவு செய்யப்பட்டது என்றாலும் எதிரி ஒரு நாளும் நிறுவன நடவடிக்கைகளில் ஈடுபட்டது இல்லை என்றாலும் சரியல்ல. அன்றாட நடவடிக்கைகளை ஸ்ரீராம் தான் பார்த்து வந்தார் என்றாலும் அவருடன் தான் பரிவர்த்தனை என்றாலும் சரியல்ல. எதிரி நிறுவனப்பரிவர்த்தனைக்காக காசோலைகளை தனது மகனிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஸ்ரீராம் பெற்ற கடனுக்காக இந்த வழக்கு காசோலை எனக்கு கொடுக்கப்பட்டது என்றாலும் அதில் உள்ள கையொப்பத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி பெற்ற கடனுக்காகத்தான் காசோலை கொடுத்தார். எதிரியின் மகன் ஸ்ரீராம் கடந்த 13.07.2024 அன்று இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு அவரிடமிருந்த வரவு செலவிற்காக அவர் கொடுக்க வேண்டிய தொகைக்காக இந்த வழக்கு காசோலை மற்றும் உரிமையியல் வழக்கில் தாக்கல் செய்த காசோலை ஆகியவற்றை கடந்த 2024 அக்டோபர் மாதம் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2023 வருடம் எதிரி பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட பிறகு எதிரி பெற்ற கடன் தொகையை வசூலிப்பதற்காக எதிரியின் கணவரிடம் ஆவணம் எதையும் பெறவில்லை என்றால் அவரிடம் பேசிக்கொண்டுதான் இருந்தேன். இந்த வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் மற்றும் தொகைக்கும் எதிரிக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றாலும் எதிரியின் மகன் ஸ்ரீராம் பெற்ற கடனுக்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரியின் மகன் பெற்ற கடனை திருப்பி செலுத்திவிட்டார். சுப்புலட்சுமி காண்ட்ராக்டர் நிறுவனம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தவில்லை. அதை எதிரி மற்றும் எதிரியின் மகனும் சேர்ந்துதான் வாங்கினார்கள். மேற்படி விவரங்களை புகார் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் வழக்கிற்காக தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் சரியல்ல. ஸ்ரீராமுவிற்கு அதிகபட்சமாக எவ்வளவு கடன் தொகை கொடுத்துள்ளேன் என்றால் அது ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். சோலை கண்ணன் என்பவர் மீது STC No.3022/2022. 3023/2022 என வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்குகளில் சோலைக்கண்ணன் தான் ஸ்ரீராமை அறிமுகப்படுத்தினார் எனவும் அவர் கோடிகணக்கில் தொகை செலுத்த வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் ஸ்ரீராமுவிற்கு மட்டும் தான் வரவு செலவு இருந்தது என்றாலும் எதிரியின் குடும்பதாருக்கும் எனக்கும் எந்த பழக்கமும் வரவு செலவு இல்லை என்றாலும் நிறுவனத்தில் கொடுத்துவைத்திருந்த காசோலையை பெற்று தவறாக பயன்படுத்தி எதிரி மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி சட்டப்படி செலுத்த வேண்டிய தொகை ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.04.01 13:16:08 +0530

Judicial Magistrate No.I

Dindigul.